பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 06 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u> -

- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- பேரிடர் நிர்வாகத்தின் சிறப்பான நடைமுறைகளை இந்தியா கடைபிடித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.
- லடாக்கில் பீரங்கி பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஐந்து ராணுவ வீரர்கள் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சம்பவத்துக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.
- ஹவாய் தீவு அருகே நடைபெறும் 29 நாடுகளின் ஒருங்கிணைந்த கடற்படை பயிற்சியில் இந்தியாவின் நவீன ஐ என் எஸ் ஷிவாலிக் போர்க்கப்பல் இடம்பெற்றுள்ளது.

உலக கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இன்று இந்தியா - தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி பொறுப்பேற்ற பின்னர், ஆற்றும் முதலாவது உரை இது என்பதால், பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

பேரிடர் நிர்வாகத்திலும், பேரிடர் மீட்புப்படை செயல்பாடுகளிலும் சிறப்பான நடைமுறைகளை இந்தியா கடைபிடித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

பேரிடர் மீட்புப்படை வீரர்களின் மலையேற்ற வெற்றிவிழாவை கொடியசைத்து தொடங்கி வைத்த அமைச்சர், பேரிடரின்போது உயிரிழப்புகளை முற்றிலுமாக தவிர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

பேரிடர் காலங்களில் மோசமான சூழ்நிலைகளை கடந்து உயிரையும், உடைமைகளையும் மீட்பதில் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இப்படையை நவீனப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மீட்புப்படை வீரர்களும் மலையேற்ற பயிற்சியில் ஈடுபடுவது, அவர்களின் திறனை மேம்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மலை உச்சியை எட்ட வேண்டும் என்ற முனைப்போடு செயல்படுவதால், அவர்கள் பணியிலும் இலக்குகளை நிர்ணயித்து சிறப்பாக செயல்பட முடிவதாக திரு அமித்ஷா கூறினார்.

இமாச்சல பிரதேசத்தில் உள்ள 21 ஆயிரத்து 625 அடி உயரத்தில் உள்ள மணிரங் மலைப்பகுதியில் தேசிய பேரிடர் மீட்புப்படை வீரர்கள் இந்த மலையேற்ற பயிற்சியை மேற்கொண்டனர்.

**[]<<<>>>[]**

லடாக்கில் பீரங்கி பயிற்சியில் ஈடுபட்டிருந்த ராணுவ வீரர்கள் ஐந்து பேர் **Shyak** ஆற்றைக் கடக்க முயன்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

**Daulat beg Oldi** பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டதாக பாதுபாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆற்றில் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் இந்த விபத்தில் உயிரிழந்த வீரர்களை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ராணுவம் கவலை தெரிவித்துள்ளது.

ஐந்து ராணுவ வீரர்கள் பயிற்சியின்போது உயிரிழந்திருப்பது மிகுந்த வேதனை அளிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

வீர தீரமிக்க இந்த ஐந்து வீரர்களின் தன்னிகரற்ற சேவைக்கு நாட்டு மக்கள் தலைவணங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வீரர்களின் குடும்பத்திருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு ராஜ்நாத் சிங் தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தேசிய தேர்வுகள் முகமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் பஞ்சுகுலாவில் நடைபெற்ற பிஜேபி மாநில செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கேள்வித் தாள்கள் வெளியாவதை தடுக்க கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று தெரிவித்தார்.

கேள்வித்தாள் முன்கூட்டியே வெளியானது தெரியவந்தால் உடனடியாக அந்த வழக்கு சிபிஐ-யிடம் ஒப்படைக்கப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

ஹரியானா மாநிலத்தில் பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்றும் திரு தர்மேந்திரபிரதான் நம்பிக்கை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஐந்து நாள் பயணமாக மங்கோலியா சென்ற தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தலைமையிலான இந்திய தூதுக்குழுவினர் இன்று தமது பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்புகின்றனர்.

இந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் சர்வதேச பார்வையாளர்களாக செயல்பட்ட 40 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டில், இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் தேர்தல் நடைமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

தேர்தல் நடைமுறைகளில் ஒத்துழைப்புக்கான பல்வேறு விஷயங்கள் குறித்தும் மங்கோலியாவில் நடைபெற்ற இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

தேசிய புள்ளியியல் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

புள்ளியியல் துறைக்கு சிறப்பாக பங்களித்தவர்களை கௌரவிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 16-வது நிதி ஆணையத்தின் தலைவர் டாக்டர் **Arvind Panagariya** பங்கேற்று பேசினார்.

அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் புள்ளியியல் தரவுகள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க வகை செய்யும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்திருத்த மசோதா இன்று சட்டப்பேரவையில் நிறைவேறியது.

இதற்கான மசோதாவை இன்று பேரவையில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

கள்ளக்சாராயம் காய்ச்சுவது, விற்பனை செய்வது உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோருக்கு ஆயுள் தண்டனையும், பத்து லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்றும், அவர்களின் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்று அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை காப்பதில் மாநில அரசு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்கு முதலமைச்சர் பதிலளித்து பேசினார்.

18 ஆண்டுகளாக நின்று போயிருந்த சிவகங்கை கண்டதேவி அருள்மிகு சொர்ண மூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்டம் எந்த பிரச்சினையுமின்றி காவல்துறை உதவியுடன் சுமூகமாக நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

போதைப்பொருள் நடமாட்டம் மற்றும் விற்பனையை முற்றிலுமாக தடுக்கவும், கள்ளச்சாராயத்தை ஒழிக்கவும் காவல்துறை மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மது மற்றும் போதைப் பழக்கங்களுக்கு எதிராக விழிப்புணர்வு பிரச்சாரங்களும் அதிகம் முன்னெடுக்கப்பட வேண்டுமென அரசு கருதுவதாக திரு மு க ஸ்டாலின் குறிப்பிட்டார்.

கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கான உண்மையான காரணத்தை அறியவும், குற்றவாளிகளை கைது செய்யவும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீடு திட்டத்தின் பயன்களை அவர்களின் பெற்றோர்களும் பெறும் வகையில் இந்த திட்டம் மறுசீரமைக்கப்படும் என்றும், நடைமுறை சிக்கல்களை களைந்திட தலைமைச் செயலாளர் தலைமையில் விரைவில் ஆய்வுக் கூட்டம் நடத்தி தேவைப்படும் நெறிமுறைகள் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

காவலர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் திரு மு க ஸடாலின் பட்டியலிட்டார்.

[]<<<>>>[]

தமிழக அரசின் பல்துறை செயல்பாடுகள் குறித்த இந்திய தலைமை கணக்காயரின் அறிக்கை இன்று தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ்நாடு முதன்மை கணக்காயர் திரு ஜெய்சங்கர் அளித்துள்ள இந்த அறிக்கையில், மின்னணு கொள்முதல் கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கட்டுமானப் பணியாளர்களின் நலன் குறித்த தகவல்களும், தொழிலாளர்களை பல்வேறு வாரியங்களில் முறையாக பதிவு செய்வது குறித்தும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருவாய் கணக்குகள் மற்றும் டாஸ்மாக்-யின் செயல்பாடுகள் ஆகியவை குறித்தும் பல்வேறு தகவல்கள் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

குஜராத் மாநிலம் அகமதாபாத், கோத்ரா மாவட்டங்களில் நீட் முறைகேடு தொடர்பாக சி பி ஐ பல இடங்களில் சோதனை நடத்தியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பாட்னாவில் இந்த வழக்கு தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த சோதனைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

[]<<<>>>[]

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், தில்லி முதலமைச்சருமான திரு அரவிந்த கெஜ்ரிவாலின் நீதிமன்ற காவல் அடுத்த மாதம் 12-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு கெஜ்ரிவாலின் மூன்று நாள் சிபிஐ காவல் நிறைவடைந்த நிலையில் இன்று விடுமுறைக்கால நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதிபதி திரு அமிதாப் ராவத் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

[]<<<>>>[]

ஹவாய் தீவு அருகே தெற்கு சீனா மற்றும் பசிபிக் பெருங்கடல் பகுதியில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த கடற்படை பயிற்சியில் இந்தியாவின் நவீன ஐ என் எஸ் சிவாலிக் கடற்படை போர்க்கப்பல் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட இந்த கப்பல் பல்வேறு நவீன அம்சங்களுடன் மறைந்திருந்து தாக்கும் திறனையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த போர் பயிற்சியில் 29 நாடுகளைச் சேர்ந்த 40 போர்க்கப்பல்கள், நீழ்மூழ்கி கப்பல்கள், 150-க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் இடம்பெற்றுள்ளன.

25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாக இப்பயிற்சியை ஒருங்கிணைத்துள்ள அமெரிக்க கடற்பை கூறியுள்ளது.,

இப்பயிற்சி ஆகஸ்ட் மாதம் ஒன்றாம் தேதி வரை நடைபெறும்.

**[]<<<>>>[]**

உலக கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இன்று இந்தியா - தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

**Bridgetown-**ல் இப்போட்டி, இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும், இப்போட்டியின் இரண்டாவது நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் தென்னாப்பிரிக்கா தனது முதல் இன்னிங்ஸில் நான்கு விக்கெட் இழப்புக்கு 236 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக இந்தியா தனது முதல் இன்னிங்ஸை ஆறு விக்கெட் இழப்புக்கு 603 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

**[]<<<>>>[]**

உலக டேபுள் டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Yashaswini ghorpade – Diya parag chitale** இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

***End of News***